## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW–1 – COS. No.4/2026**

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 23–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி அய்யா திரு.H.முகமது அன்சாரி, அவர்களின் முன்னிலையில் திருமதி.N.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சிதம்பரம் | தொழில் : பாரத ஸ்டேட் வங்கி, வீரபாண்டி கிளை. |
| த/பெ. : திரு.கதிர்வேல் முருகேசன் | வயது : 39 |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 20.05.2022 தேதியிட்ட கடன் விண்ணப்பம் | அசல் | **வா.சா.ஆ–1** |
| 2 | 20.05.2022 தேதியிட்ட கடன் அனுமதி மற்றும் கடன் ஏற்பாட்டு கடிதம் | அசல் | **வா.சா.ஆ–2** |
| 3 | 20.05.2022 தேதியிட்ட கடன் ஒப்பந்தம் | அசல் | **வா.சா.ஆ–3** |
| 4 | 02.09.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ–4** |
| 5 | 04.09.2024 தேதியிட்ட 1–ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வா.சா.ஆ–5** |
| 6 | 07.07.2025 தேதியிட்ட கடன் எண்.40996504541 கணக்கு விவரம் | கணிணி நகல் | **வா.சா.ஆ–6** |
| 7 | 09.07.2025 தேதியிட்ட கடன் எண்.40996504541–ன் கடன் நிலுவை இருப்பு சான்று | கணிணி நகல் | **வா.சா.ஆ–7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari

Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.06.23 17:11:11 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.